
# உள்மன யாத்திரை



**நவீனன்**

- ஐங்கரன் விக்கினேஸ்வரா

# உள்மன யாத்திரை

# உள்மன யாத்திரை

-நவீனன்-

ஐங்கரன் விக்கினேஸ்வரா

வைகறை வெளியீட்டகம்


# "உள்மன யாத்திரை"

முதற் பதிப்பு : 2000 கார்த்திகை 13
பதிப்புரிமை : நவீனன்
வெளியீடு : வைகறை வெளியீட்டகம்
ரஷ்யா.

*நன்றி* -
ஓவியங்கள் : தீபன்

*தொடர்புகளுக்கு* -
வைகறை வெளியீட்டகம்
*P.O.BOX - 45,*
*SMOLENSK,*
*214019,*
*RUSSIA.*
• E-mail: naveenan@mail.ru

# சமர்ப்பணம் :



அமரர். கந்தையா தர்மலிங்கம்
தோற்றம் -13.10.1910
மறைவு -30.04.1985

அமரர். மனோன்மணி தர்மலிங்கம்
தோற்றம் -27.07.1911
மறைவு -21.12.1999

**எனது கரங்களை மட்டுமல்ல,
உயிரையும் தமிழுக்காய் தந்த
என் இனிய தாத்தாவுக்கும்
அம்மம்மாவுக்கும் இந்நூல்
சமர்ப்பணம்!**



## இது வரையில் நான்......

- *அணையாத அறிவாலயம்*
  - யாழ் பொது நூலக நினைவுக்கவிதைகள்
  (1989)
- *விடியலின் கானம்*
  (1989)
- *இன்னமும் இருட்டினில்*
  (1989)
- *உறக்கந்தேடும் உலகிற்காய்*
  (1989)
- *உனக்குள்ளேயே உள்ளிருப்பு*
  ஹைக்கூ கவிதைகள்
  (1990)
- *இழப்புக்களையும் இழப்போம்*
  ஹைக்கூ கவிதைகள்
  (1990)
- *கல்லறைக்குள் கதிரவன்*
  ஹைக்கூ கவிதைகள்
  (1990)
- *வெண்பனிச் சுவடுகள்*
  (1998)
- *காற்றோடு பேசுதல்*
  (1999)
- *அக்னிப் பிரவேசம்*
  (1999)
- *கல்லறை மேலான காற்று*
  - வடமராட்சி 'ஒப்பரேஷன் லிபரேஷன்' நினைவுக்கவிதைகள்
  (1988)
- *மரணம் வாழ்வின் முடிவல்ல*
  - அகிலன் நினைவுக்கவிதைகள்
  (1990)
- *அம்மம்மா நினைவலைகள்*
  (2000)

# கடந்து போன காலங்களும்..
# கடக்க வேண்டிய கடினங்களும்..

என் கரங்கள் கவிதைகளில் படரத் தொடங்கி ஒன்றரை தசாப்தங்களாகிப் போகின்றன. ஆனால் கவிதைக்குள் நான் மூழ்கிப் போனதாய் நினைக்கின்றேன். வாழ்வின் இளமையான காலங்களை நான் தொலைத்து விட்டு, சிறகு முறிக்கப்பட்ட வானம் பாடியாகவே கவிவானில் பறக்க முயல்கின்றேன். அதனாலும் எனக்குள் என்றும் மகிழ்ச்சியே முழுமையாய் பிரவாகிக்கும். என் இளமைத் துடிப்பினை விட தமிழின் கவிதைகளைக் கரம் பிடித்ததை எண்ணி நான் எப்போதுமாய் மனப்பூரிப்படைந்தே திருப்தி யடைவேன்.

இளமையான இனிய காலங்களை எப்படித் தொலைத்தேன் என்பது தான் எனது கவிதைகளின் கருப் பொருள் அல்ல! என் இளமைப் பராயத்தில் கவிதைக்காக ஏதோ கிறுக்கல்களை வரைந்தேன் என்பதும் என் கவிதைகளின் அடி நாதமும் அல்ல!! என் கவிதைகளில்


*என்றும், எங்கும், எப்போதும் ஒரே கருப்பொருளும், அடி நாதமும் 'விடுதலை' என்ற உயிர் வாழ்வின் உன்னதச் சொல்லே!...*

*கவிதைகளின் உயிரூட்டத்திற்கு மட்டும் உருவங் கொடுப்பது தான் எந்தன் கரங்களின் பணியானது அன்று. யதார்த்த பூர்வமான வாழ்விற்கு மக்களால் மக்களுக்கு எடுத்துச் சொல்லப்படும் என் கவிதைகளின் மையக்கருத்தாய் விளங்குவது 'விடுதலை' என்ற தாரக மந்திரமே!*

*விடுதலை!... மானுட வாழ்வின் ஒவ்வொரு கணங் களிலும் உயிர்ப்பிக்கப்படும் ஒவ்வொரு சுவாச மூச்சும் விடுதலை தான். கருவறைக்குள் விந்தாக விதையாகி உட்பவிப்பதும் ஒரு விடுதலை தான். தொப்புள்க் கொடியுடன் உலகின் அவலத்தைக் காணும் முதலாவது அழுகையும் ஒரு விடுதலையின் முதற்படி தான். உறவுகளும், வாழ்வின் வசந்தங்கள் மிளிரும் இளமையின் துடிப்புக்களும், மன எண்ணத்தில் தோன்றுவதும் இளமையின் விடுதலையே... இப்படியே விடுதலை... விடுதலை... என்றே வரிகளை அடுக்கிச் சொல்லலாம். ஆயினும் என் சொற்களுக்கு விடுதலையாய் விடுதலையையும் விடிவிற்கின்றேன்.*

*ஆனாலும் ஒரு நொடிப்பொழுது கூட சுதந்திர சுவாசக் காற்றை சுவாசிக்க முடியாது அல்லலுறும் எம் மக்களுக்கு விடுதலையை வெறும் வெற்று வார்த்தைகளால் அலங்கரித்து விடமுடியாது. விடுதலைக்காய் தினம் தினம், கணத்துக்கு கணம் கொடுக்கும் விலை! அத்தியாகத்தனை எப்படியும் அளவிட முடியாது. அவை பெறுமானிக்க முடியாத வீரத்தியாகங்களே!...*

*இதனால்த் தான் என் விரல்கள் பேனாவைப் பற்றிப் பிடித்தவுடன் 'விடுதலை' 'சுதந்திரம்' என்றே முதலில்*














வரைய ஆரம்பித்து விடும். ஆயினும் எப்போதும் என் நெஞ்சினை நெருடும் முள்ளாக, பாரிய வினாவாக எழுவதும் ஒன்றே! தாயக மண்ணிலிருந்து தூர விலகி பனி கொட்டிடும் துருவ நட்சத்திர மினிரல்களிடையே வாழ்ந்து கொண்டு அல்லலுறும் மக்களின் ஒரு துளி சோகத்தினைக் கூட அநுபவிக்காமல், எப்படி என்னால் பேனாக்களால் மட்டும் எழுதிக் கொள்ள முடிகின்றது என்பதே?...

ஆனாலும் எங்கள் மண்ணின் துயரத்தை தினம் தினம் காணாது விட்டாலும், அதனை எண்ணி கணத்துக்கு கணம் மனம் நினைந்து கொள்வதை எண்ணி ஏதோவொரு வகையில் திருப்திப்பட்டுக் கொள்வேன்.

தாயக மண்ணிலிருந்து தொலை தூரம் தாண்டி இருப்பினும், எங்கள் மண்ணின் அவலத்தை, மக்களின் துயரத்தை வெளிக் கொணர்வதும் சாலச்சிறந்ததே. ஆயினும் களத்தில் கருவிகள் ஏந்திப் போராடும் போராளிகளுக்கு ஒப்பானது அல்ல, பேனாக்களை ஏந்திய எங்களின் கரங்கள்.




நாளுக்கு நாள் துன்பமுறும் எம் மக்களின் துயரங்கள் துடைத் தெறியப்படும் நாளும் விரையும் என்ற நம்பிக்கைகளும் புலப்படுகின்றது. புலரும் புத்தாயிரம் ஆண்டினில் ஓங்கி எழும் பேரலைகளில் எங்கள் மண்ணின் விடியலும் கரை சேரும் எனும் உறுதியுடன் வாழ்வோமாக!...

என்றும் அன்புடன்
நவீனன்.

உள்ளிருக்கும் என் உள்ளத்தின்
உணர்வுக் கவிதைகளின் அகமாய்...

## "அகம்" :


01. வீர உயிர்ப்பு.............................................................13
02. இளவேனிற்கால புதுமையாய்.......................................16
03. மடுவின் மடியினிலே.................................................18
04. வீரம் விளைந்த வணங்கா மண்!...............................20
05. எடடா காலை எடு!.....................................................23
06. துட்டகைமுனுக்களின் வரலாற்றுக் கொடுமை.........24
07. வாழ்வுக்கு அழகு!.......................................................27
08. எக்காளமிட்ட குள்ள நரியே!.......................................28
09. வீரமுடன் எழுகவே!....................................................30
10. மண்டேலா எனும் மானுடனுக்கு ஒரு மடல்!..........32
11. எங்கள் கரங்கள் உயரும்...........................................38
12. அடுப்போடு வாழ்ந்தீர்! நெருப்போடு எழுவீர்!!.......40
13. காலத்தின் கட்டாயமாய்.............................................43
14. வீரத்தின் விருட்சங்கள்.............................................44
15. வீழும் வீழும் விரைந்தே வீழும்!...............................46
16. சில வேளைகளில்..சில மனிதர்களின்......................48
17. தாய்த் தமிழக தமிழ்ப் பெருந்தகைகளே................50
18. எழுகவே! வானுயர எழுகவே!!.................................56

நெஞ்சினில் என்றும் நெருப்பாய்
நெருடும் நினைவுவரிகளின் முகமாய்...

## "முகம்" :


01. இன்னும் சொல்வதற்கிடையில்..............................59
02. வாழ்வின் வனாந்தரம்..............................61
03. உள்மன யாத்திரை..............................62
04. செஞ்சூரியச் சுடராய் என்றும்!..............................64
05. உள்ளத்தின் உள்ளிருப்பவளே..............................66
06. சற்றே பொறு, என் இனியவளே!..............................68
07. சொடுக்குதல்..............................70
08. மனப்பூ..............................72
09. மீளமீள மீண்டிடும் அன்றைய நினைவுகள்..............................74
10. தித்திக்கும் தீபாவளித் திருநாளினிலே..............................77
11. என்ன தயக்கம்?..............................78
12. உன் இன் முகம் பார்த்திடவே!..............................80
13. இளமையின் உயிருக்காய் உயிரூட்ட..............................82
14. புதுமையாய் புலரட்டும் தமிழ் புது வருடமே..........84

*உள்ளிருக்கும் என் உள்ளத்தின்*
*உணர்வுக் கவிதைகளின் அகமாய்...*

**"அகம்" : ☞**

## வீர உயிர்ப்பு

இன்று ஏதோ ஒரு விதமாய்
என் உடலின் உயிருக்குள்
ஒரு உயிர்ப்பு
புத்துயிர்ப்பாய்...
கரும்பனைகளும், நெடிய தென்னைகளும்
ஆரவாரஞ் செய்யும்
ஆர்ப்பரிப்பில் என் மனமும்
மகிழ்ந்து கொள்கிறது...

நேற்று நேற்றாகயிருந்த
எக்காளத்தின் கொடூரர்களை
துடைத்தழித்த தீரமிகு
வெற்றியின் பெருமிதப்பினில்
என்னையறியா என்னுள்ளிருக்கும்
உயிரும் மீள மீளவாய்
உயிர்த்துக் கொள்கிறது...

காற்று வீசுந் திசைகள்
எங்குமாய் வீரக்கதைகளாய்...
கரும் பனைகளின் நேரிய முகிழ்ப்பினிலே
காவிய நாயகர்களின்

இன்முகமும் விழிக்கிறதே...
காரியம் கனமாய்த்
தொடர்கிறதே...
எங்கும் வெற்றியாய்...
எங்கும் வீர முழக்கமாய்...

என்னுள் இருக்கும் — என்
உள் மனம் மீள மீள
களத்தின் நாயகர்களை
கரங்கூப்பி கட்டி அணைத்திட
வேண்டிடுகின்றது...

இன்று, இன்றான
வெற்றியினில் என்றும்
மலரும் சுபீட்சத்துக்காய்
கரும் பனைகளும், நெடிய
தென்னைகளுமாய் உங்களுக்காய்
உங்களின் அரண்களாகின்றன...

வசந்தம் வீசும்
வைகறைப் பொழுதினிலே
புத்துணர்வோடு எழுகின்றார்
தான்தோன்றீஸ்வரப் பெருமானார்...
நேற்று நேற்றான நாட்கள்
நரகங்களில் அழிந்து
இன்று, இன்றான
வசந்த வேளையினிலே
கூப்பிய கரங்களுடன்
உமைத் தொழுது கொள்கின்றேன்
தான்தோன்றீஸ்வரப் பெருமானாரே!..

வேண்டிய வரங்களையெல்லாம்
வீரத்துடன் அளித்திடுவீர்...

தோண்டியே புதைத்திடுவீர்
கொடுஞ் சூர அசுரர்களை...

வீரமாய் முழங்கிடும்
வணங்கா மண்ணிலே
கரும் பனைகளும், நெடிய தென்னைகளுமாய்
போற்றிப் புகழ்கின்றன — உங்கள்
வீர மகுடத்தினை...

என்னுள் என்னாக — என்
உயிரின் புத்துயிர்ப்பாய்
வேண்டிக் கொள்கிறேன் — வீரத்
தான்தோன்றீஸ்வரப் பெருமானாரை!...

●

(02-11-1999)

## இளவேனிற்கால புதுமையாய்

இளவேனிற்கால ஓர்
புதுமையாய்...
நெஞ்சினில் நெருப்பேற்றிய
நிமிர்த்தலாய்
என் மனதினில் என்றுமில்லாத
ஓர் புத்துணர்வாய்...
தாயகத்தின் நினைவுகளில்
நான் மூழ்கிப் போகையில்
மீள மீள
நெஞ்சின் வீர நிமிர்த்தலாய்
என் மனமும் உயிருமாய்
புலகாங்கிதமடையும்...

என்றுமில்லாத புதுமையாய்
வீர வணங்கா மண்
வன்னியின் வெற்றியின்
நிச்சயத் தாற்பரிப்பினிலே
என் மனதும்
பூரிப்படைந்து கொள்ளும்!...

என்றுமில்லாத புதுமையாய்
வெற்றியை எமதாக்கியே
வீர முழக்கமிடும்
தாயகக் களத்திலிருக்கும்
என் மக்களின் மனதோடு
என் மனதும்
ஒன்றிக் கொள்ளும்!...

இளவேனிற்கால புதுமையாய்
என்றுமில்லாத
இளவேனிற்கால புதுமையாய்
என் மனம்
பூரிப்படைந்து கொள்ளும்!..

●
(01-04-2000)

## மருவின் மடியினிலே

மாதா கோயில் மணியோசை
கேட்டு அமைதியாகு முன்...
வானத்தைப் பிளந்த
வேட்டொலிகள்...
மருவின் மடியினிலே
மண்ணின் அழுகையாய்...

மரித்த மாந்தர்களின்
குருதியின் மேலாய்
சிவப்பு மைகளால்
எழுதி உரிமையும் கோருவர்...

ஆபத்திற்கு உதவியதாய்
ஆஸ்பத்திரிக்கு தூக்கிச் சென்றதாய்
களப்பலியை மூடியும் மறைத்திடுவர்...

மூன்றாம் நாளினில்
யேசுநாதர்
உயிர்த்தெழுந்ததாக
சிறு வயதில் கேட்ட செய்தியெல்லாம்
நிஜமாக வேண்டுமென
மனம் நொடிந்து கொள்ளும்...
மீள
யேசு நாதர் உயிர்த்தெழ

வேண்டுமென
நிஜமாக வேண்டுமென
மனம் நொடிந்து கொள்ளும்...
மடுவின் அமைதியைக் கிழித்து
கோரத் தாண்டவமாடிய
கொடூரர்களை
அழித்திட மீள
யேசுநாதர்
உயிர்த்தெழுந்திடுவீராக!...

உயிர்களுக்கு இங்கேயேது
மதிப்புண்டு?..
பகட்டு மேனிக்கு
கிரிக்கட் 'ஸ்கோர்' போல
அப்பாவிகளின் உயிர்களை
எண்ணிக்கை கொள்வதில்
என்ன மகிழ்வோ?...

கூட்டிக் கழித்து
பெருக்கிப் பிரித்து
மனிதங்களின் மரிப்பில்
ஏது வெற்றி கொண்டனர்?...
மடு மாதாவின் மடியினிலே
மரித்த மாந்தர்க்கு என்ன
பதில் கொடுப்பர்?...
பிரிவினைவாதி என்றா?...
தீவிரவாதி என்றா?...
அன்றில்
'லங்கா புவத்' அலறுவது போல
பயங்கரவாதி என்றா?...

●

(22-11-1999)

## வீரம் விளைந்த வணங்கா மண்!

ஒன்று இரண்டு தடவைகளா
ஊரை விட்டு ஓடி
காடுகளிலும் மேடுகளிலும்
தஞ்சங் கொண்டோம்?...

ஊரை அழித்திடும்
எமதூதர்களுக்கு இன்றோ
கடைசிப் பயணமாய்...

நம்மூர் நன்னிலத்தை
நாசப்படுத்திய நாசகாரர்களுக்கு
இன்றோடு முற்றுப்புள்ளியாய்...

தேரோடும் வீதிகளில்
எக்காளச் செருக்கர்களின்
தாங்கிகள் தாறுமாறாய்
ஓடிட எங்களூர்
தெருக்கள் எத்தனை காலமாய்
வாய் மூடி மௌனித்திருக்கும்?...

இளந்தமிழ் கன்னிகளை

கண்டபடி ருசி பார்த்திட
எங்களூர் பெண்கள்
என்ன
உந்தன் ஊர்
கடைச்சரக்கா?..
அன்றில் அநுராதபுரத்து
வேசிகளா அவர்கள்?...

நம்மூரை
வந்து பார்க்க ஆவல்ப்பட்டாய்!
இறுதி எச்சரிக்கையும் விடுத்தோம்!
எங்கள் தேசத்தின் வாசலை
வரவேற்பின்றியே
வந்தடைந்தாய்...
இன்றோ நன்றாய்
வாங்கிக் கட்டிக் கொண்டு
புறமுதுகிட்டு ஓடுகிறாய்...

வந்தாரை வரவேற்று
வாழ வைக்கும் வரலாற்று
பெருமை மிகு
தமிழர் பண்பு...


ஆயினும், ஆயினும்
எங்கள் மண்ணை
அபகரித்திட ஆவல்
கொண்டே
சோதிடங் கணித்தே
பரிவாரங்கள் பல படை சூழ்ந்தும்
எங்கள் வன்னி வள மண்ணை
ஆர்ப்பாட்டத்துடனேயே
ஆக்கிரமித்துக் கொண்டாய்...

இன்று என்ன?...
இன்று என்ன?...
வீரம் விளைந்த
வணங்கா மண்
வன்னி வள மண்ணே
உங்களை உயிருடனேயே
கண் கலங்கி நிற்கும்
ஏழைச் சிங்களத் தாய்மாரின்
ஆறுதலுக்காய்
உயிர்ப்பிச்சை பெற்று
ஊர் திரும்பி ஓடுகின்றீர்கள்!...

மீண்டொரு தடவை
கனவிலும் நினைத்துப்
பார்க்காதே!...

வீரம் விளைந்த வன்னி
மண் மட்டுமல்ல...
எங்கள் தேசத்தின்
எல்லைகளுக்கருகில்
மூச்சு வாங்குவதைக் கூட
நினைத்துப் பார்க்காதீர்கள்!...

●
(06-11-1999)



*எங்கள் தேசம் திறந்தவெளி சிறையாய்*
*இன்னும் எத்தனை நாட்களாய்?...*
*ஆயினும் மண்ணைப் பிளந்தே*
*எழுந்திடும் மக்கள் சக்தியுமே...*

## எடடா காலை எடு!

எங்கள் மண்ணில் நீ பதித்த
கால்களை மீளப் பெறு!
இல்லையேல்!
எங்களுக்காக புற்களும்,கற்களும்
கண்ணிவெடிகளாகும்..

காற்றுக் கூட உன்னைச் சுடும்,
எங்கள்
வன்னியில் கருங்காடுகள் கூட
பீரங்கிகளாய் முழங்கும்..

வானமே உனக்கு பெரும் இடியாய்
தலை மீது இடிந்து வீழும்!
எடு உன் காலை!
இல்லையேல்
எங்களின் மண்ணிலிருந்து
உன் தாடை எலும்புகள் கூட
'பிரித்' ஓதக் கூட விகாரைக்கு
மீள முடியாது!
எடு உன் காலை!!
எடு!!

●

(13-05-1998)

## துட்டகைமுனுக்களின் வரலாற்றுக் கொடுமை

மக்களுக்காய் மரித்த
மகாத்மாக்களின்
கல்லறைகளைக் கூட
அரக்க அந்நியர்கள்
விட்டு வைக்கவேயில்லை...
புல்டோசர்களைக் கொண்டே
புனிதக் கல்லறைகளையே
தோண்டிச் சிதைத்தனரே...
எத்தனை கொடுமை...
எத்தனை கோரம்...
எத்தனை அநாகரிகம்...

கௌதம சித்தார்த்தனே
இதனைப் பார்த்திடின்
வெட்கித் தலை குனிந்தே
கூடவே இரத்தக் கண்ணீரும்
பொழிந்திடுவார்...

உலகின் நாகரிகம்
மீள ஒரு தடவை
வெட்கியே மௌனிக்கும்...
மண்ணில் வாழ்பவர்களுக்கே
உயிர் வாழ உத்தரவாதமில்லை...
ஆயினும்
ஈழ மண்ணுக்காய் மரித்தே
மண்ணுக்குள் துயிலும்
வீர மாந்தர்களின்
அமைதியான உறக்கத்திற்கும் தான்
உத்தரவாதமில்லையோ...

கொடுமை! இதுவோ
கொடுமையிலும் கொடுமை...
கோரத்தாண்டவமாடும் கடூர
துட்டகைமுனுவின் பரம்பரையின்
வரலாற்றுக் கொடுமையிதுவோ?...

ஆயினும்...
ஆயினும் கல்லறைக் காவிய
நாயகர்கள் மீள மீள
உயிர்த்தெழுவர்...
மீண்டுமாய் உயிர்த்தெழுவர்...


காலங் காலமாய்
காவிய நாயகர்களின்
சுவாச உயிர் என்றுமாய்
முகிழ்த்துக் கொண்டேயிருக்கும்...

கல்லறைக் காவிய நாயகர்கள்
மீண்டுமாய் உயிர்ப்பதுடன்
புதிய புதிய ஆயிரமாயிரம்
புது வீரர்களுடன்

களம் புகுவர்...
அன்றே துட்டகைமுனுவின்
பாரம்பரையினர் புரியும்
வரலாற்றுக் கொடுமைகளும்,
கொட்டங்களும் அடங்கும்!...

●

(05-12-1998)



ஆண்டாண்டு காலமாய்
அந்நியரால் அடக்கி ஒடுக்கப்பட்டோம்...
எங்கள் சுதந்திரத்திற்காய்
தாயக மண்ணில் அணிவகுப்போம்...

## வாழ்வுக்கு அழகு!

தோன்றி மறைந்து
வீழ்ந்திடும் இந்த வாழ்வு!
வாழும் போது தானே
வாழ்வின் மகிமை தெரியும்!
இல்லையேல்
வாழ்வுக்கு ஏது அழகு!

வாழும் வாழ்வு வளமாயின்
அஃதே வேண்டிடும்
விடுதலை கொண்ட மூச்சும்
சுதந்திரமான உயிர்ப்புந் தானே!

வாழ்வே கருகி ரவைகளுக்கிடையே
நொருங்குகையில் வாழ்வின்
உயிர்ப்பிற்கு உணர்வூட்டுதல்
அவசியமாகும் — அதுவெனில்
உயிருக்கு உயிரான
உரிமை கொள்ளும்
விடுதலைப் போரினை
வென்றிடல் ஒன்றே!

●
(01-01-1999)

## எக்காளமிட்ட குள்ள நரியே!

அவசர வெற்றிகளில்
கொக்கரித்து எக்காளமிட்ட
கண்டியின் குள்ள நரியே!
நீ இன்று பதுங்கி ஒளிவது
ஏன் தானோ?...

தமிழரின் தொண்டைக் குரல்வளையை
நெரித்தவனின் தொண்டைக்
குரல்வளையையே நெரித்ததாய்
240 வருட அடிமைச் சின்னம்
தமிழர் சேனையாலே
வெற்றி வாகை சூடுகையில்
கொக்கரித்து எக்காளமிட்ட
கண்டியின் குள்ள நரியே!
எங்கே ஒளிந்து கொண்டாய்?...
அன்றில்
எங்கு தான் முடங்கிக்
கொண்டாயோ?...

ஆயிரமாயிரம் வீர மறவர்களின்
குருதியால் நனைந்த
ஆனையிறவுத் தொடுபாலம்...
மாண்ட வீர மறவர்களின்
கனவுகளும்
ஏப்ரல் இருபத்திரண்டினில்

வீரமுடன் பலித்ததாய்...
ஓங்கி அடித்த ஓயாத
அலைகளில் தாயக மண்ணும்
மகிழ்ச்சிக் கடலில்
ஆர்ப்பரித்து எழுந்ததே...

இனி எத்தனையாயிரம்
அந்நிய ஆக்கிரமிப்புக்கள்
ரிவிரசவாய், சத்ஜெயவாய்,
ஜெயசுக்குறுவாய், ரணகோசவாய்
இன்னுமாய்...
எங்கள் மண்ணை ஆக்கிரமிப்பின்
அந்நிய ஆக்கிரமிப்பு இராணுவத்தின்
இறுதிச் சடங்குகளுக்காய்
காற்றில் தூவிடக் கூட
சாம்பலும் மிஞ்சாது!...

கண்டியின் குள்ள நரியே!
அவசர வெற்றிகளில்
கொக்கரித்து எக்காளமிட்டாயே!
நீ இன்று பதுங்கி ஒளிந்தது
எங்கே?...

கண்டியின் குள்ள நரியே!
இனியும் உன்
அந்நிய ஆக்கிரமிப்பு இராணுவம்
எங்கள் மண்ணை ஆக்கிரமிப்பின்
இனி என்றுமாய்
பதுங்கி ஒளிந்தே
ஒழிய வேண்டும்!...

●

(22-04-2000)

## வீரமுடன் எழுகவே!

எழுகவே எழுகவே!
வீரமுள்ள தீரமுள்ள
தமிழனாக எழுகவே!

ஆண்ட பரம்பரை மீள
ஆள்வதற்காகவே எழுகவே!
அடிமைப்பட்டுக் கிடந்த எங்கள்
தாய் மண்ணை மீட்க எழுகவே!

அழுது மடியும் எங்கள்
அன்னை கண்ணீரை
துடைத்திடவே எழுகவே!
வீரங்கொண்ட வேங்கையாய்
எழுகவே என்றும் எழுகவே!

தாயகத்தின் விடுதலைக்காய்
தம்முயிரை ஈந்த மாவீரர்களின்
கனவுகள் பலித்திட எழுகவே!
எழுகவே!
வீரமுடன் எழுகவே!

மாண்ட வீரர் கனவு
நனவாகிட தமிழர் எல்லோரும்
எழுகவே!...

எங்கள் வீரக் கொடி
சுதந்திரமாய் பட்டொளி வீசிப்பறந்திட
எழுகவே!
தமிழா வீரமுடனே எழுகவே!...

●

(27-11-1998)

## மண்டேலா எனும்
## மானுடனுக்கு ஒரு மடல்!

சிறையிலும் வாடாத கறுப்பு
மலரென — உந்தன்
நேரிய தியாகத்துக்காக சிகரக்
கவிதை வரிகள் பலதாலும்
நாமும் நீவிருமாய்
விடுதலைக்காய் சிலிர்த்தே விழித்தோம்..!

அடக்கி ஆண்ட அடிமைத்தனத்துக்குமாய்
நெருக்கி வதைத்த இனவெறிக்குமாய்
எரித்து அழித்த நிற வேற்றுமைக்குமாய்
விடுதலையின் சுவாசக் காற்றை
கறுப்புச் சிறைகளிலிருந்துமே
வீசிட வைத்த வேட்கை மணாளன் — நீ
மண்டேலா எனும் மகத்தான மானுடன்.

நேற்று வரைக்காய் உமக்காய்க்
குரல் கொடுத்தோம்! சீரிய
தென்னாபிரிக்கத் தோழர்களுக்காய்
தொண்டை கிழியக் குரல் கொடுத்தோம் !
வீழும் இனவாத — நிறவாத வெறியர்க்கு

எதிராய் விடுதலைப் பயணத்திலும்
சகோதரப் புரிந்துணர்வுடன்
தோழமையாய்க் கரங் கொடுத்தோம்.

இன்று உமதாய்!..
வையகமே புது வரலாறு கண்டதாய்
வாயார விண்ணுயரப் போற்றிப்
புகழ்ந்திடும் விடுதலைப் போராளியாய்!
அடிமைத்தனத்திற்கு சாவு மணியடித்த
சரித்திர நாயகனாய்!
நிறவெறிக்கும் இனவெறிக்குமாய்
நெருப்பாய்க் கனன்ற
பரணி புகழ் வீர மைந்தனாய்!..

ஆயினும் ஆயினுமாய்
தொடரும் அழுகுரல்கள்
உங்கள் செவிகளிலும் கேட்கும் என்பதில்
ஐயமில்லை!..
ஆபிரிக்காவின் அங்கோலாவிலும்,
ஐரோப்பாவின் அயர்லாந்திலும்,
ஆசியாவின் ஈழத்திலுமாய்,
அமெரிக்காவின் கிரனடாவிலுமாய்
தொடரும் அவலங்களும்
அழுகுரல்களும்
உந்தன் செவிகளுக்குக் கேட்கும்..
என்பது விடுதலை வேண்டும்
மானுடத்தின் அவா!

ஆயினும் ஆயினுமாய்!..
சிறைப்பட்ட உந்தன் கரங்கள்
நிற வெறியரையே மன்னித்து
மானுடத்திற்கே புகழ் போர்த்திய
மகாத்மா.. நீ! மண்டேலா எனும்

மானுட மகாத்மா!..
காலங் காலமாய் கதறி அழும்
எந்தனூர் தாய்மாரின் அழுகுரல்கள்
உனக்கும் கேட்க வில்லையா?..
மானுடத்தின் மகாத்மாவாய் வாழும்
உந்தன் கண்களுக்கும் எங்களூர்
அவலங்களும் புலப்படவில்லையா?..
நெஞ்சைத் தொட்டுப் பார்!..
நேர்மையின் செழுமையாளனே!
வாழ்வின் வசந்தங்களை இழந்து விட்டு
விடுதலைக்காய் வழி தேடும்
மாந்தர்க்காய் — உரிமைக் குரல் கொடு!
உரத்துங் குரல் கொடு!

உமக்காய் — உந்தன் தோழர்களுக்காய்
தென்னாபிரிக்க தேசியக் காங்கிரசுக்காய்
வன்னியிலும் வாகரையிலும்
வதங்கிய மக்கள் தானே — அன்றைய
நாட்களில் குரல் கொடுத்தனர்!
நீவீர் மறக்கவில்லை — மறக்கப் போவதும்
இல்லை என்பதில் நாம்
மனப் பூரிப்படைகின்றோம்!

ஆயினும் ஆயினுமாய்
வரலாற்றின் வடுக்களோடு
எந்தன் தெருக்களே கண்ணீர்
எந்தனூர் தெருக்களே
மாந்தர்களே மடிந்து
வாடுகையில் — உங்களின்
தோழமைக் கரங்கள் எங்கே?
உங்களின் நேசக்குரல்கள்
தான் எங்கே?..

மண்ணும் மக்களும்
தலையை மூடி
தீக்கோழிகளாய் இன்று!..
மௌனித்தே வாழுகின்றனர்..
வரலாற்றில் வாழும் – விடுதலை
வரலாற்றின் சர்வ தேச நாயகனே
எங்கே உந்தன் குரல்!
எங்கே உந்தன் கரங்கள்!

நிறவெறி வெள்ளை ஏகாதிபத்தியத்துக்காய்
நீவீர் மட்டுமின்றி – நாமுந்தானே
எதிர்ப்புக் கொண்டோம்!
நமீபியா விடுதலைக் கீதத்தில்
மனமகிழ்வு கொண்டதும்
நாமுந்தானே! தேசிய ஆபிரிக்க
கொடி 'ஜேனர்ஸ் பேர்க்கில்' பறக்கையில்
எங்களின் மனப்பூக்களுமல்லவா
பூரித்துக் கொண்டன!
ஆயினும் ஆயினுமாய்
இன்றோ ஒருவேளை கஞ்சிக்காய்,
அரைத்துண்டுப் பாணுக்காய்
மடியும் எந்தனூர் மாந்தரைப் பார்த்தீர்களா?..
வாழ்க்கையே போராட்டமாய்
போராட்டமே வாழ்க்கையாய்

வாழ்ந்து போராடும்
எம்மவர்க்காய் எங்கே?
எங்கே உங்கள் குரல்கள்
எங்கே உங்கள் நேசக்கரங்கள்?

வாழும் நாட்களும் வளரும்
துயரங்களுமாய் – நெஞ்சுக்கு
நீளும் துர்ப்பாக்கிய துட்பாக்கிகளுக்கு

எதிராய் – வதை கொள்ளும்
வன்முறை இனவெறியர்க்கெதிராய்
உங்கள் எதிர்ப்பு எங்கே?
எங்களுக்காய் ஆதரவு எங்கே?

இது திறந்த மடல் அல்ல!
அழுகின்ற மக்களின் வேண்டுதலும் அல்ல!
உண்ண உணவும், உடுக்க உடையும்
குந்த ஒரு நிலமும் வேண்டும்
மானுடத்தின் அவலக்குரலாய்த்
தானுமாயன்றோ!..

மானுடமே மரிக்கின்றது..
மரிக்கும் மாந்தர்க்காய்
வேட்கை கொண்ட விடுதலை
மாந்தர்க்காய்
எங்கே? எங்கே? உங்கள்
குரல்!

உங்களுக்காய் நாம் கொடுத்த
குரலுக்கும் தோழமைக்குமாய்
நன்றிக் கடனைச் செலுத்துங்கள்
எனவும் வேண்டவுமில்லை?..
ஆயினும்... ஆயினுமாய்
எங்கே? எங்கே?
ஒரு தரம் விழிக்கவும் உங்கள்
கண்கள்!
ஒரு தரம் குரல் கொடுக்கவும் உங்கள் வாய்கள்!..
மானுடத்தின் மகாத்மாவே
நேரிய நெஞ்சங் கொண்டவனே
விடுதலையின் வீரியங் கொண்டவனே – சுதந்திர
வாழ்விற்கு வளம் சேர்த்தவனே
எங்கே? எங்கே?

மானுடத்துக்காய் குரல்?!.
எங்கே எங்கே
மானுடத்துக்காய் குரல்?!.
மானுடத்துக்காய் குரல்?!...

•

(1998)

## எங்கள் கரங்கள் உயரும்

உலகம் ஒரு தடவையா, இரு தடவையா
ஊமையாகிப் போனது?
ஆயிரமாயிரம் பல்லாயிரம்
தடவைகளாய் ஊமையாகித் தானே
போனது இந்த உலகம்?

கண்களை மூடி வாய்களை மௌனித்து
ஊமையாகித் தானே
போனது இந்த உலகம்?
அழிந்திடும் மாந்தர்களின்
அவலங்களை கண்டு கொள்ளாமலேயே
இந்த உலகம் குருடாகி
மௌனித்திருக்கின்றதோ?..

கொக்கட்டிச்சோலையிலும்,
குமரபுரத்திலும், நவாலியிலும்
நாகர்கோயிலிலும்
இன்னும் எத்தனை எத்தனையாய்
ஊரோடு ஊராக
தூர்ந்து போன ஊர்களாகின...

இனி ஏது மௌனம்...

கோசாவாவுக்கு ஒரு நியாயம் – திரு
கோணமலைக்கு இன்னோர்
நீதியா?
என்ன கொடுமை...
அங்கேயும் மாந்தர்கள் தானே
இங்கே என்ன 'மா'க்களா?..

இனியும் மௌனித்திருக்குமாயின்
உலகே மன்னித்து விடு!
எங்கள் கரங்கள் எங்களுக்காக
எழுந்து கொள்ளும்...
பின்னராய் சட்டமும், நீதியுமென
எங்கள் கரங்களை
கட்டிப் போட்டு விடாதே!

உலகே மன்னித்து விடு!
எங்கள் கரங்களை
கட்டிப் போட்டு விடாதே!
எங்கள் கரங்கள் எங்களுக்காக
எழுந்து கொள்ளும்...

●
(24-04-1999)

## அடுப்போடு வாழ்ந்தீர்!
## நெருப்போடு எழுவீர்!!

கண்ணகிகளின் கதறல்கள் தானே
இன்னமும் பல மதுரைகளை
கருக்கிக் கொண்டிருக்கின்றன..
இனியும் பல கண்ணகிகள்
பிறந்திடில் பூமிப் பந்தே
சாம்பலின் எச்ச சொச்சமாகும்..

கற்பென கன்னியென தாமே
தமக்குள் இட்டுக் கொண்ட
பால்யச் சிறைகள்..

விதவையாய், உடன்கட்டையாய்
பெண்ணின் சுதந்திரத்திற்கு
பெண்ணே பெண்ணுக்காய்
அணிந்த பெருவிலங்குகள்..

பெண்கள் தாமே தமக்கிடும்
சாபக் கேடுகள்..
மரபென மழுங்கிப் போன
மாந்திரீக பழைய சம்பிரதாயங்கள்

இன்னமும் தொடர்கிறது..

அடுப்போடு வாழ்ந்தீர்
இன்று
நெருப்போடு எழுவீராக..

முன் புலவர் எல்லாம்
பூவையர் என்றனர், பூந்தளிர்
எனப் புதுச் சுவையூட்டினர்..
பெண்ணை ஒரு
தேன்பண்டமாயும், படுக்கையறை
பாவையாக்கியும்
பாக்கள் பல பாடினர்..

அன்றோ
மகனைப் போருக்கும்
கணவனைக் களத்துக்கும்
அனுப்பிக் கண்கலங்கி – கை
விடை கொடுக்கும் பெண்களைத்
தானே போற்றிப் பாவலர்
அகமும் – புறமுமாய்
காவியமும் – காப்பியங்களுமாய்
பலதையுமாய்ப் பாடினர்..

இன்றோ
போர்ப் பரணியில் பல
காவியம் படைக்கும்
கன்னிகளாய்
களமீதினிலே வெற்றி வாகை
சூடிடும் வீரப்புதல்விகளாய்
இனமானம் காக்கும் – இளந்
தமிழ்ப் பெண்களாய்
வையகம் வியக்கும்

வண்ணமாய்
காவியம் கொள்ளும்
வீரக் கன்னிகளாய் — புதுப்
புற நானூறும்
பாடிடும் காலமிது..

வானிலும் மின்னல்
கொடிகளாய் — எம்
கன்னியர் அவர்
பரணி பாடும் நாளும்
கனன்று விரைகின்றதே!..

அடுப்போடு வாழ்ந்தீர்
நெருப்போடு எழும்
நாளிது..

பால்யக் காம வெறி
காமுக சதை ருசிக்கும்
எதிரியின் கொட்டங்களையும்
கொத்தளங்களையும் அழிக்கும்
நாளும் இன்றதுவேயென
சபதமிடுவீர்..
அடுப்போடு வாழ்ந்தீர்
நெருப்போடு எழும்
நாளிதுவே..

●
(08-03-1999)



போர் வெறி கொண்டலையும்
ஆதிக்க ஆக்கிரமிப்பாளரல்ல நாம்...
என்றும் அமைதியும் சமாதானமும்
வேண்டிடும் தீரத் திராவிடரே நாம்...

## காலத்தின் கட்டாயமாய்..

அகவையையே அகராதியாக்கி
தேன் கிண்ணத்தையே தீஞ்சுவடாக்கி
வரலாற்றையே வகுப்புப் பாடமாக்கி
எங்கள் மறவர்களும்
தீரத் தியாகிகளும் வாழ்ந்த மண்ணில்
வீழுவது வீரத் தமிழா — அல்லது
எதிரியின் கொட்டமா?

எடு போர்க் கோலை — தமிழ்க் கவிஞனே!
எடு போர்க் கருவியை — தமிழ் மைந்தனே!

வீழ்வது எதிரியா — அன்றில்
எங்கள் மறவரா?
இல்லையே இல்லை
எங்கள் மறவர் படை
வரலாறு புதிதாய் படைத்தே எழுவர்!

இது காலத்தின் கண்ணியமாய்...
இது காலத்தின் கட்டாயமாய்...

●

(05-03-1998)

## வீரத்தின் விருட்சங்கள்

கொடுமையிலும் வதையிலும்
வாழ்வின் சுகங்களை
விடுதலைக்கே விதையாக்கிக் கொண்ட
மகாத்மாக்கள்! நாளும் வாழும்
வரலாற்றின் தியாகிகள்!..
வீழ்ந்த எம் முன்னோர்
இராட்சியங்களுக்கும் இன்னுமாய்
பதில் கூறிடுவர்..

வீரத்தை நெஞ்சினிலேற்றி
விடுதலையை மனதால் உரமேற்றி
காலத்தின் வேகத்தில்
காற்றோடு காற்றாகக்
கரைந்து கொண்டவர்களே!
உங்கள் யாக யாத்திரையின் வழியே
இன்னுமாய் இன்றும் என்றுமாய்
தொடரும் – சுப யாத்திரையில்
நாமுமே..

தியாகத்தின் மேலாய் – என்றும்
தீரங்கள் புரிந்தீரே!

உம் திருமுகங்களை காணாது
காற்றோடு கை கோர்க்கின்றோம்...
உயரும் கரங்கள் உமக்காய்
என்றும் எங்கருவிகள் விடியலுக்காய்
வசந்தத்தை பொழிந்திடும்...

வீரத்தின் விருட்சங்களாய்
நீவீர்!
விடுதலை வேட்கையின்
மாண்பு பற்றாளராய் நீவீர்!

காலங்கள் எல்லாம்
உங்கள் கல்லறையில் கண்ணீரைப்
பூக்களாய்ச் சொட்டிக் கொள்ள
நாளை நிமிரும் — எம் வீர
மானத்தின் ஆணி வேராய்
நிலை கொள்வீர் நீவீர்!

இன்னும் — இனியுமாய்
கருமை நீக்கியே செஞ்சூரியப்
புதல்வர்களாய்
வரலாற்றின் வரிகளில்
மிளிர்ந்து கொண்டிடும்
மின்னல் பிளம்புகளாய்
நீவீர்!

•

(1999)

## வீழும் வீழும்
## விரைந்தே வீழும்!...

வீழும் வீழும் கொடியவர்
கோட்டைகளும், கொத்தளங்களும்
வீழும்!...

நாளும் பொழுதுமாய் கயவர்
படையின் காடைக் கொலைத்தள
கொட்டங்கள் வீழும்!...

யாழ் கோட்டை வீழ்ந்தது!...
முல்லைப் பெருந்தளமும் வீழ்ந்தது!...
கிளிநொச்சியுமாய் வீழ்ந்தது!...
வீர வணங்கா மண் வன்னியுமே
எங்கள் கைகளிலே வீழ்ந்தன!...

வீழும் வீழும் கொடியவர்
கொத்தளங்கள்
தினம் தினமாய் வீழும்!...

அடிமைப்பட்ட தமிழினம்
மானத்துடனே வீரங்கொண்டு
எழுந்திடவே!...

வீழும் வீழும் கொடியவர்
கொத்தளங்களும் வீழும்!...
விரைந்தே வீழும்
வீழும் வீழும்
விரைந்தே வீழும்!...

●

(10-11-1999)

# சில வேளைகளில் சில மனிதர்களின் சின்னத்தனங்களும்..

சில வேளைகளில் — இந்தச்
சிறுமை கொண்ட மனிதர்களின்
சின்னத்தனங்கள்...
ஒரு தேசத்தின் புனிதமான
நாட்களிலுமாய்...
தனி மனித வரட்டு
கௌரவத்திற்காக
புனிதமான, தியாகமான
நாட்களும் கொச்சையாகின்றன...

யார் மன்னிப்பார்?
யார் இவரை பாவிகள் என்பார்?
ஆண்டவனின் சன்னிதானத்தில்
மூலக் கல்லை யார் கட்டியது
என்று பார்த்தா
பக்தன் கும்பிடுகிறான்?..

வானத்தைப் பார்?

மண்ணைப் பார்?
ஓடும் நதியைப் பார்?
அலை வீசும் கடலைப் பார்?
யார் இதற்கு முதன்மையானவன்
என்று பார்த்தா
வையத்துள் வாழ்கிறோம்?..

இந்தச் சின்ன மனிதர்களின்
சிறுமைகளும், சின்னத்தனங்களும்
மானமிழந்து வாழும் மானுடரை
விடக் கீழான
கீழ்த்தரமானவர்களே...

சில வேளைகளில் – இந்தச்
சிறுமை கொண்ட மனிதர்களின்
சின்னத்தனங்கள்...
என்றுமாய்த் தான் இவர்களின்
சின்னத்தனங்களுமோ?..

●

(28-11-1999 மன நெருடல்களாய்)

## தாய்த் தமிழக தமிழ்ப் பெருந்தகைகளே தணியாத் தாகம் தீர்ந்திட துணையாவீர்!..

அன்பான தமிழ் அன்புள்ளவர்களே
தமிழுக்காய் தமிழ் மானங்காக்கும்
இனமானப் பெருந் தகைகளே
வேண்டுதலாய் யான் விடுக்கும்
விடுதலைக்கான விரைவு மடலாய்
உங்களுக்காய் தேனைத் தென்றலாய்
கனியை இனியை
உவமையோடும் உவர்ப்போடும்
தமிழோடு தகைமை கொள்ளும்
தமிழகப் பெருங் கவிகளே,
இலக்கியப் பண்டிதர்களே
கேட்கும் யான்- உங்களைப்
பார்த்து பெருமை கொள்கிறேன்,
பேருவகை மனமகிழ்வுறுகிறேன்..........
காலங்காலமாய்
காவியமாய் காப்பியமாய்
களம் பல கண்ட வெற்றிகளுக்கு
எல்லாம் போற்றிப் புகழ்ந்தே

பரணிகள் பலதும் பாடினீர்?

மண்ணை மானத்தைக் காக்க
மாவீரர் தியாகிகள் தீரஞ்
சொல்லியும் புகழ்ந்தீர்?
ஏன் இன்று மௌனம்?
ஏன் இப்போ புறக்கணிப்பு?
ஓரினம்- இல்லை
எங்கள் தமிழினம்
விடுதலைக்காய் விரைவு
அடைகையில்
எங்கே உங்கள்
வீரக் குரல் ? கம்பீர
பரணிப் பாக்கள்
விடுதலைவேண்டும் மானுடத்திற்காய்
கவிதையாய் கதைகளாய்
காவியங்கள் பலவும்
பாடினீர்-
நமீபியாவுக்கும், வியட்நாமுக்கும்,
வீரப் பலஸ்தீனத்துக்குமாய்
ஆதரவுக் கரங்களை
நேசக் குரலுடன்
இலக்கியம் பலவும் படைத்தீர்?

இனவெறியை, நிறவெறியை,
மதவெறியை, சாதியவெறியை
சாக்கடைக்குள் தூக்கியெறிய
சபதம் பலவும் கொண்டீர்
எம் தமிழ் மண் வாழ
எம் தமிழ் மானம் நிமிர
தம்மையே தியாகித்து
தரணி புகழ் இலக்கியம்
பலவும் படைத்தீர்

தமிழகப்பெருங் கவிகளே
பாரணிக்கெல்லாம் மானுட
விடிவிற்காய் பாக்கள் பல
படைத்தெழுந்தீர்
பைந்தமிழ் வையகமெங்கும் மிளிர்ந்திட
விடியல் தேடும்
மானுடத்திற்காய்
உயிர்ப்புக் கொடுத்தீர்கள்
உரிமையும் பெற்றுக்
கொடுத்தீர்கள்?
தமிழ்க் கதாசிரியர்களே
காவிய கதாநாயகர்களே,
வியட்நாம் விடுதலைக்காய்
விரைவுப் பயணங் கொண்டீர்,
கியூபப் புரட்சிக்காய்
சுடும் மணலிலும் உண்ணாவிரதங்
கொண்டீர்
தென்னாபிரிக்கத் தோழர்க்காய்
தோளுங் கொடுத்தீர்
போற்றிப் புகழ்கின்றோம்
உங்கள் பெரும் பணிகளை
வாழ்த்தி வரவேற்கின்றோம்
வரலாற்றுப் பணிகளை.......
ஆயினும் ஆயினுமாய்
தொப்புள் கொடி உறவான
ஈழ மண் வாடும் போது
வதங்கிக் கருகும் போது
எங்கே உங்கள் குரல்?
எங்கே உங்கள் தோழமைக்
கரங்கள்?............

நாவினிய நல்ல தமிழ் பல
கதைத்திடலாம், வாய் மொழிந்தே

வார்த்தைக்கு வார்த்தை
வர்ணம் பூசிடலாம்..............
ஆனால் வாடி வதங்கி
எம் ஈழவர் துயர் தீர்க்க
துணிவு கொள்ள மாட்டீரோ

பாலஸ்தீனத்தைப் பற்றி
பலதும் பா நவிழ்ந்தீர்-எங்கள்
பட்டிருப்பு படும் துயரந் தீர்க்க
எங்கே உங்கள் பாக்கள்.........
நமீபியாவை விடுவிக்க
உலகெங்கும் உயரக் குரல்
கொடுத்தீர்
நம் நல்லூர் நலிவுறுவதனைக்
காண்பீரோ?...........

அல்லல்படும் எம் அன்புச்
சோதரங்களிற்காய்
ஆதரவுக் குரல் தனையாவது
கொடுப்பீரோ?...........
ஆண்டாண்டு காலமாய்
அல்லல்படும் ஈழவர்க்காய்
ஆதரவுக் கரங்களை
அன்போடு தானீனும் தாரீர்
மாண்டு போன மறவர்
எமக்காய் மரித்தவரே
தாண்டு போகும் தமிழினம்
தலை நிமிர்ந்து வாழ்ந்திட
வீரச் சேனைக்காய்
தண்டு வலித்திட
நீலக் கடல் மேலினிலும்
காவியம் படைப்பீராய்

வீரமாய் எழும்
விடுதலைப் பயணத்தில்
உங்கள் கரங்களையும்
ஒன்றிணைப்பீர்
நேசங் கொண்ட
நேர்மையாளர்களே
விரைவு படும் வீரத் தமிழ்
இனத்தின் விடுதலைக்காய்
உளத் தூய்மையுடன்
உயரக் குரல் கொடுங்கள்?

நாளும் பொழுதுமாய்
நம் ஈழத் தமிழினம் படும்
அல்லல் தீர
அன்பான தமிழகப்
பெருங் கவிகளே
உங்கள் கரங்களில்
பேனாக்களை
நேர்மையோடு நிமிர்த்தி
வரையுங்கள்
நாங்கள் வாழ்ந்து
மடிந்து போனதாய்
வரலாறு இல்லாமல்
நாங்கள் விடுதலையோடு
சுவாசித்து வாழ்ந்து
வீரத் தமிழனாய்
மடிந்ததாய் வரலாறு
கூறட்டும்
வரலாறும் எமக்காய்
வரையட்டும்

இன்னும் இன்னுமாய்
சொற்களால்

உங்களோடு கவி மடல்
வரைவதை விட
செந்தமிழின் இனிமையில்
வேண்டிக் கொள்கிறேன்.
வாழுந் தமிழுக்காய்
என்றும்
வாழுந் தமிழுக்காய்
விடுதலை வேண்டிடும்
மானுடத்துக்காய்
உயரவே
குரல் கொடுங்கள்
உரிமை வேண்டும்
உணர்வுள்ளவர்க்காய்
உங்கள் தோழமைக் கரங்களுடன்
தோள் கொடுப்பீர்
நேரிய தியாகப் பயணத்திற்காய்
நேர்மையுடனே
நெஞ்சத்துணை கொடுப்பீராய்

●

(1999)

## எழுகவே! வானுயர எழுகவே!!

நிலைத்துக் கிடக்கும் வானமீதும்
பனி படர் முகிழ்விடும் குன்றுகளிலும்
எல்லைகளையே தொடாத நீலக் கடலிலும்
வெண்பாறை வெளி மணற்காடுகளிலும்
எழுகவே! வானுயர
எழுகவே!!
எங்கள் ஈழக் கொடி!
மானத்தைக் காத்த கொடி
எங்கள் மறவர்களின் — தீரஞ்
சொல்லும் கொடி!
எங்கும் — என்றும் பட்டொளி
வீசியே பைந்தமிழை பரணி
எங்குமாய் பறை சாற்றிடவே
எழுகவே! எங்கும் எழுகவே!!
எங்கள் ஈழக் கொடி!
என்றுமாய்!..

●
(1999)



*வெட்டி முறிக்க முறிக்கவே*
*முப்பலங் கொண்டே எழுவோம்...*
*மண் வாசனை வீசிடும் கரும்பனைகளின்*
*வீர வரலாறு ஒருபோதும் அழிந்திடாது...*

*நெஞ்சினில் என்றும் நெருப்பாய்*
*நெருடும் நினைவுவரிகளின் முகமாய்...*

***"முகம்" : ☞***

## இன்னும் சொல்வதற்கிடையில்..

இன்னும் சொல்வதற்கிடையில்
நூல் ஏணியில்
உயரக் கொடி கட்டப்
போனதாய்...
பருந்தையும், நிலாவையும்
சூரியக் கிரகணத்தில்
அன்புத் தூது விட்டுக் கொண்டதாய்...
இன்னும் சொல்வதற்கிடையில்...

ஒவ்வொரு கனாக்கால
இரவுகளின் நிசப்தங்களைக்
குழப்பிக் கொண்டு
மீண்டும், மீண்டுமாய்
என்னருகில் உன் நிழலும்
பிம்பமாய்...
இன்னும் சொல்வதற்கிடையில்
பைன் மரத்து பச்சைக்
காற்றை சுவாசிக்கும் — என்
மூச்சுக் குழல்கள்...
உன் இருப்பின் அவசியத்தை
என் வாழ்வின்
காதலாய்க் காட்டிக் கொள்கிறது...


இன்னும் சொல்வதற்கிடையில்
நேற்றோடு போன
பழைய காகிதக் கனவுகளாய்
என் வாழ்வின் சௌமியமும்
அல்லவா தூரவே
தூசிக்குள் வீசி விட்டாய்...

இன்னும் சொல்வதற்கிடையில்
என்னை எப்போதாவது
தொலைப்பாய் தானென
நினைத்திருந்தேன் — அஃதே
நேற்றோடு போன
காகிதக் கனவுகளாய்...
இன்றில்லா விட்டாலும் — என்றாவது
என்னருகில் உன் துளிராய்
காதல் முகிழ் கொள்ளும்
இப்படியாய் இப்படியாய்
கனவுக் குப்பைகளாய்...
என் காதலை — உன்
கைகள் கசக்கி வீசிடும்...

ஆயினும், என்றாவது
என்றாவது...
ஆயினும் ஆயினுமாய்...
என்றாவது ஓர் துளிர் நொடிக்குள்
நான் மகிழும் கணங்கள் வரும்
என்னருகில் — உன்னருகில்
நீயும் நானுமாய்
நானும் நீயுமாய்...

•

(1998)



வாழையடி வாழையாய் - வீரத்
தமிழராய் வையகமெங்கும் வாழ்ந்திடவே...
செவ்வாழை அழகின் மிளிர்வாய்
எங்கள் தலைமுறையும் சிறந்திடவே...

## வாழ்வின் வனாந்தரம்

நிலத்திற்கு நீர் இன்றி விடின்
வரட்சி கொள்ளுமே?
ஆற்றுக்கு ஊற்று பெருக்காவிடின்
தரையும் பாறையாகுமே?

மனதுக்கு மகிழ்வின்றிவிடின்
அலையாய் கோடம் புரளுமே?
வாழ்வுக்கு வசந்தமில்லாவிடின்
வனாந்தரம் தோன்றிடுமே?

காதலுக்கு முறிவு ஏற்பட்டால்
மட்டுமா தேவதாசாய்
தாடி வளருமோ?
வாழ்விற்கே வனாந்தரம் ஏற்படுகையில்
உடையில் மட்டுமல்ல
வாழ்க்கை நடையிலுமாய்த் தான்
நான் ஓர் சன்னியாசி!

●

(10-05-2000)

## உடைமனை யாத்திரை

ஒளி மங்கிய ஒரு
இருண்ட வேளைக்குள்
என் மனம்
என்றும் போலவே
சஞ்சலப்பட்டுக் கொள்ளும்...

ஒவ்வொரு பொழுதும்
நாட்களைக் கடந்து
வருடங்களை விழுங்கிச்
செல்கையிலும் – என் மனம்
சஞ்சலப்பட்டுக் கொள்ளும்...

இன்றோடு எத்தனையாவது
அகவைக்குள் நானென
நினைக்கையிலும்...
எனி இனியாவது
சுதந்திரமாய் சுவாசிக்கும்
காற்றாவது உலகப் பந்தினில்
நிறைந்திட வேண்டுமென
மனம் சஞ்சலப்படும்...

வானமே எல்லையாக
மனதின் அதீத ஆசைகளாய்
கலைகள் பல படைக்க
என் கரங்கள் உயர
கற்பனைகளில் மிதந்தே
சாதனை பல புரிந்திடவும்
மனமும் வேண்டி நிற்கும்...

ஆயினும்
கனவுகளும் கற்பனைகளுமாய்
வாழ்வதில் என்ன கண்டதாய்
மீளவும் மனச் சஞ்சாரத்தில்
நான் மூழ்கிக் கொள்வேன்...

நாட்கள் பல கடந்து
வருடங்கள் பல கழிந்தும்
இன்னும் எத்தனை பல
அகலைவகள் நான் கண்டும்
என் மனதின் சஞ்சாரமாய்
சுதந்திரத்தின் சுவாசக் காற்றினை
சுவாசித்திடவே
என் மனதும் என்றுமாய்
வேண்டி நிற்கும்!...

●

(2000)

## செஞ்சூரியச் சுடராய் என்றும்!

ஒவ்வொரு நிமிடத்தின்
ஆறு பத்து வினாடிகளில்
அதன் துளிர்க் கணுக்களிலும்
கூடுதலாகவே – உந்தன் நினைப்பிலுமாய்
நானும் – நானுமாகவே...

சடுதியாக முகம் மீது
வீசி விட்டுப் போன பனிப்புகாரின்
அழுத்த வீச்சுக்களில்
வெளிரிக் கொள்ளும் – இமைகளும்
உள்முகமாய்...

இன்னும் ஒரு கணத்தில்
பிரசவிப்புக்காய் உட்பவிக்கும்
நிஜக் கனவுகளில்...
எந்தன் ஊர் செவ்வரத்தம் பூ
வாச மலர்களில் உந்தன்
தலையை வாரி பூச்சூடி மகிழும்
எந்தன் உள்மனம்...

கடந்த கால இறப்புக்களில்
நிகழ் காலத்தின் உண்மைகளும்
பலித்துப் போனதாய்
சில நேரம் – பலதுமாய்
மனம்
நெடிந்து கொள்ளும்...
தினத்துக்கு தினம்

மணிக்கொரு தரம்
காலம் மாறும் கோலத்தில்
உன் மனதையுமா மாற்றிக்
கொள்கிறாய்...

கோடை போய் இலைகள்
துளிரும் காலம் வந்தும்
கொட்டும் பனியின்
மாரிக் கணைகளாயும்
உந்தன் மனமுமா
மாற்றிக் கொள்ளும்...
காலங்கள் மாறலாம்
கோலங்களும்,ஞாலங்களும்
சிதறுண்டு போகலாம்...
ஆயினும் – மானுடக்
காதலின் மனமுந் தான்
மாறிக் கொள்ளுமா?

இல்லையேல் – இல்லை
என்றும் செஞ்சூரியச் சுடராய்
ஒளிவீசிக் கொள்ளும்
என் மனமும் – நானுமாய்...
உந்தன் நினைப்புக்களில்
இனிப்பாய் மூழ்கிக் கொள்கிறேன்
உந்தன் இதயக் கடலனுள்!

என்றுமாய்
செஞ்சூரியச் சுடராய்
நான் – நானுமாய்!..

●

(1999)

## உள்ளத்தின் உள்ளிருப்பவளே

எங்கும் பதுமையாய் பனி
படர்ந்து குளிரின் உறைவை
மனதிலும் பதித்துக் கொண்ட
வண்ணமாய்...

காலை விடிந்து விட்டதோ
நினைக்க முயல்கையில்
தூக்கக் கனாக்கள் இன்னும்
நித்திரைச் சோம்பலை
முறிக்க முயலவில்லை...

ஒவ்வொரு நாளும்
ஏதோ பனிக்கால கனாக்களாய்
மலர்ந்து கொள்ளும்...
உன்மனதும் பனிப்பூக்களை
மலர்ந்து கனாக்கொள்ளும்...

ஆயினும்
ஒரு பொழுதினில்
பனிவிழும் மேகத்தினில் எழும்
சூரியச்சுடரொளிகளில்

கரையும் துளிர்ப்பனி போல
என் கனாக்களுமாய்...

ஆயினும்
ஒரு பொழுதினில்
அவள் உள்ளத்தில் என்
நிஜ எண்ணத்தை விதைத்திட
ஆவல்க் கொள்வேன்..
மங்கும் மாலையில்
மயங்கும் தாரகைகளாய்
என் எண்ணம் அவள்
மனதினில் உரமேறிட
ஆவல் கொள்வேன்!...

அன்பினைப் பொழிய
அவள் உதடுகளைத் தேடிடுவேன்...
பனி கொட்டி
இலைகள் துளிர்ந்த பைன்மரக்
காம்புகளில் என் எண்ணமும்
தொற்றிக் கொண்டிருக்கும்...

சூரியக் கதிரில் கரையும்
பனித்துளிர்களாய்
உள்ளத்தைக் கொள்ளை கொண்ட
அவளோடுமான
என் கனவுகளுமாய்!...

•
(1999)

## சற்றே பொறு, என் இனியவளே!

என் இனியவளே!
தொலை தூரத்து உன் மடல்
மண்ணின் மகுடத்தை
மணம் பரப்பிக் கொண்டது!

நன்றி!
இன்னும் வரைக
மண்ணின் மானத்தை உயர்த்திட
இன்னும் மடல்களாக !

காதலுக்கும் காமத்துக்கும்
எல்லைகள் இட்டு விட்டு,
இழந்த எங்கள் மூதையரின்
வசந்தத்திற்காகவும்
இனி எங்களின் பரம்பரை
தொப்புள்க் கொடி அவிழ்க்கும் போது
சுய நிர்ணய மானிடனாக
அவதரிக்கவும்,
அன்பானவளே என்னவளே
நீயேந்தி நிற்கிறாய்
கடுங் கருவிகளை கரங்களில்..
மீண்டும் வரை
உன் மடலில்

ஒவ்வொரு வரியும்
தேசத்தையே குறித்தும்
அவதானித்தும் நிற்கையில்
என் இனியவளே
உன் தேகத்தைப் பற்றி
ஓர் சொல்லாவது
இல்லை – இல்லையேல்
இல்லை
தேசத்தைக் காக்கும் பணியில்
உன் தேகத்தை மறந்தாயோ?

நீ!
உன் தேகமிழந்தே தேசத்தை மீட்க
கரும் பெண்ணாய்
விரைகையில்
நான் எவ்வண்ணம்
கனாக் கொள்ள உன்
தேகம் பற்றியே...

சற்றுப் பொறு!
விரையும் நாளில் நானும்
உன் பாதச் சுவடுகளில்
அணிவகுக்கின்றேன்...
அது வரையில் வெண்பனி நாடுகளில்
தேமதுரத் தமிழை தேனாய்
இனித்திட சுவையூட்டுகின்றேன்...
சற்றே பொறு
என்னவளே என் இனியவளே!

●

(1999)

## சொருக்குதல்

நாங்கள் — எங்களின்
எங்களுக்குள்ளேயே முற்று முழுதாக
சொருக்கிக் கொண்டிருக்கிறோம்...

கடவுள்களுக்குக் கூட
பாவம் ஏதுமில்லை!
என்றதாய் தளிர்விடும்
என்ற நம்பிக்கையில்
உன்னதங் கொள்ளும்...

இன்னும் — நாங்கள்
எங்களின் தலைகளை நாமே
சொருக்கிக் கொள்கிறோம்...

காற்று இழந்த வானமாய்
மானம் இழந்த மனிதனாய்
என்றும் எதிலுமாய்
வெறுப்பும் — வீறாய்ப்புமான
இழந்தவைகளும் — இனி
இன்னமுமாய் இழக்கத்தக்கதாய்!

ஓரு காலைப் பொழுதினில்
சலங் கழிக்கச் சென்ற
சங்கதியுடனாய் — காணாமற் போன
எண்ணிக்கைகளில் — இன்னுங்
கூடுதலாக ஓரிரு இலக்கம்
கூடிக் கொள்ளும்...

நாமே நம் தலைகளை
சொடுக்கிக் கொண்டதாய்
ஒவ்வொரு — நிமிசங்களின் பிறப்பிலும்
உயிர்க்கும் எங்கள்
உயிரினை வேண்டிடும் உணர்வின்
விடுதலையாய்...

•

(1999)

## மனப்பூ

முற்றத்து இரு மாமரம் துளிர்த்திட
சுற்றிவர மதில்களை ஓரங்கட்டி
அடுக்கடுக்காய் விழித்துப் பூத்திருக்கும்
செவ்வரத்தம் பூக்கள்
தொங்கும் இலைகளினூடே
மாங்கனிகளைப் பறிக்க
கைகள் உயரும் காலங் காலமாய்

மார்கழி மாத குளிர் நிரை
வெண்புகாரில் காவியமாய்...
எழுதப்படாத எழுத வேண்டிய
பரிட்சைகளுக்காய் இன்னமுமாய்
பாடங் கொள்ளும் மனதின்
ஓரத்திரை!

அம்மா பாடும் சங்கீதமாய்
அப்பாவின் காலை வேதத்தில்
மங்கலம் கொள்ளும் — என்
உள்ளும் புறமுமான மனம்.

வெளிர்ந்து கொண்டிருக்கும்

கதிர்ச் சுடர்களில் — நுரை
கவிழும் பனித்துளிர்கள்
மொட்டுக்களின் விரிப்பாய்
மல்லிகையின் மணங்கமழும்!

வேஷங் கொண்ட படி — உதடுகளின்
சாயங்களால் உள்ளங்களும்...
மக்காய் மணல் மணம் வீசிய படி
காற்று வீசும் ஒவ்வொரு
திசைக்கும் — திசை காட்டிய படி

இன்றொரு நாள் — என்
மனம் பூரித்துக் கொண்டது.
உள்ளத்தின் ஊரகத் தழுவல்கள்
நெஞ்சை மகிழ்வித்த மலர்தலில்
விரிந்தது நெஞ்சப் பூ!

மார்கழிப் பனியில் இங்குமாய்
பைன் மரத் தொங்கல்களில்
வெண்பனி பூவாய்ப் பூத்திருக்கும்...
என்றுமாய் ஊரகத் தழுவல்களில்
நானும் நானாக!..

(1998)

## மீளமீள மீண்டிடும் அன்றைய நினைவுகள்

இனி ஒரு போதும்
அத்தகைய கணங்கள்
மீள மீள்வதேயில்லை...
உயிர்ப்பான வாழ்வின்
உண்மையான வெற்றியால்
நினைவில் வந்து மீளும்...
ஆயினும்,
இனி ஒரு போதும்
அத்தகைய கணங்கள்
மீள மீள்வதேயில்லை...

என்று இனி?
என்று அவள் இன்முகம்
காண்பேனோ?...
ஆயினும் வாழ்வின்
வசந்தமான சுகத்தினை
அள்ளி வழங்கிய
அவளின் நினைவுகளில்
என் மனமும்

ஆழமாகவே பதிந்திடும்...
இலை துளிர்ந்து
குளிர் காற்று வீசிடும்
மௌனமான வீதிகளில்
அவளோடு
கையோடு கைகோர்த்து
கால் போன
போக்கெல்லாம் போய்
ஏறி இறங்காத மெட்ரோக்களே
இல்லாதவையாய்
அவளோடு போன
அன்றைய நாட்கள்
மீள மீள அவை
மீள்வதேயில்லை...
பனி கொட்டிடும்
மங்கிய மாலைகளில்
மயக்கும் அவளின்
விழிகள் கவர்ந்திட
என்னை மறந்தே
என்னை நானே மறந்தே
அவள் நினைவுகளுடனாய்
மூழ்கிடுவேன்...

உறைபனி உள்ளங்கையில்
உறைந்திட்ட பின்னரே
வீடு மீண்ட
ஞாபகங்களுமாய்
இன்னும் பல்வாய்...


ஆயினும் எத்தனை முறையாய்
அவள் வருகையில்
என் கண்கள்
ஒரு துளி நொடியையே

ஒரு யுகமாய் காத்த
காலங்களும் மீள
நினைவில் வரும்...
அன்போடு போயின
அன்பான அவளின்
அரவணைப்பான நாட்களுமாய்...

இன்று என் தனிமைக்கு
இனிமை ஊட்டிடவே
அன்றைய
நினைவுகள் மீள மீள
மீண்டிடும்...
என் மனதினில்
அன்றைய நினைவுகளாய்
மீள மீள மீண்டிடும்...

•

(1999)



பொங்கும் நந்திக் கடலோரம்
வென்றிடும் முல்லைச் சிரிப்புடனே...
விரையும் விடியலின் வாசலினில்
தமிழன் வீரமும் எழுகின்றதே...

# தித்திக்கும் தீபாவளித் திருநாளினிலே

தித்திக்கும் தீபாவளித் திருநாளினிலே
தீப ஒளியேற்றி திகழ்ந்திடுவோம் பெரு மகிழ்வுடனே
புத்துணர்வு பெற்றே புது வாழ்வும் மலர்ந்திடவே
பொதுமை வென்றே உளமும் உயர்ந்திடவே

நாற் திசையும் நற் தமிழ்ப் புகழ் பரந்திடவே
நானிலமும் நமக்காய் குரல் கொடுத்திடவே
வேற்றுமை தணிந்து நம் தாயகம் செழித்திடவே
ஒற்றுமை கொள்வோம் இன்ப வேளையினிலே

கூற்றுவர் கொடிய பகைவர்களை அழித்துமே
போற்றுவோம் இந்த வெற்றித் திரு நாளினிலே
மாற்றங்கள் பல தோன்றி மலரும் கார்த்திகையினிலே
விடியலும் விரைந்தே நமக்காய் உதித்திடுமே...

•

(1999)

## என்ன தயக்கம்?

மனச்சுமை
இறுகிய பனிப் பாறையாய்
உறைந்து கொண்டிருக்கும்...
ஒவ்வொரு நிமிடத்தின்
உயிர்ப்பான உதிப்பிலும்
என் மனம்
கல்லாய்க் கனத்துக் கொள்ளும்...

இதயத்தை தொலைத்து விட்ட
ஏமாற்றத்தில்
உள்ளத்தின் உயிரும்
கருகிக் கொள்ளும்...
மனச்சுமை முன்னேதும் போலன்றி
இன்றதில் இரும்பாய்க்
கனந்திடும்...

ஏன்? ஏன்!
என்னவளே?
உன் உள்ளத்தை எனக்காய்
அள்ளித்தர இத்தனை
கஞ்சமா உனக்கு?..

நான் என்ன கொடைவள்ளலா
என் உயிரையே
உனக்காய் அளித்துவிட?...

மௌனமான என்
மனதும் நாக்கும்
உன் மறுபதிலுக்காய்
காத்துக் கிடக்கின்றன...
நீ தவறாய் நினைத்திடாதே
நான் எப்படி
மௌன விரதம் காத்திட?..

என் மனதை
கொள்ளை கொண்டவளே
உன் மனதின் நூறில்
ஒரு பங்கையாவது
இந்த ஏழைக் காதலனுக்கு
பரிசளித்திட
உனக்கு என்ன தயக்கம்
உன் மனதினில்
அப்படி என்ன தயக்கம்?...

●
(1998)

## உன் இன் முகம் பார்த்திடவே!

நினைவுக் கடலில் நீந்தி
அமிழ்ந்து கொள்கிறேன்...
கனவலைகள் பேரலைகளாய்
எழுந்து ஆர்ப்பரிக்கும்...
கடலின் மடியில் நினைவும்
நிம்மதி கொள்ளும்...
இன்னும் ஏது சொல்வதற்கு
இன்னும் ஏது உண்டு?

சென்ற காலங்களும்
கழிந்து போன நாழிகைகளும்
உந்தன் நினைவின் சின்னங்களாய்
உயிர்க்கும் எந்தன் இதயத்தின்
பரிசம்!
காதல்ச் சுவடுகள்
எந்தக் காலத்திலும் தானுமோ
அழிந்திடுமோ?...
எழுந்து மோதும் அலைகளிடையே
என்னை நானே மிதக்கவிட்டு
உந்தன் நினைவினிலே
ஆழ்கடல்ச் சுழியில்
மாண்டு போகின்றேன்...

காதல்த் துணையே!
எந்தன் இதயத்திற்கு
உயிர் ஊட்டுவளே
கரங்கொடு உந்தன்
இதயத்தின் இருப்போடு – என்னை
நிறுத்துக் கொள்ளவே...
அன்றில்
ஆழ்கடலின் அடியில்
சுழியோடு சுழியாக
சுழிக்குள் என்னைத்
தொலைத்து விடுவோனோ?..

அன்றில்
நேற்றுப் போலான ஓர்
அந்திமப் பொழுதில்
உனக்காக நான் நீட்டி வந்த
முள் ரோஜாக்களையா
தூர உள்ள குப்பைத் தொட்டிக்குள்
தூக்கி எறிந்து விடுவாயா?..

இன்யேது?
இன்றில்லாவது விடினும்
என்றாவது ஒரு பொழுதினில்
மோதும் அலைகளினூடே – உன்னை
நினைத்து வாழும் என்
இதயமும்
மோதிக் கொள்ளும்...
உன் இனிய முகங்கவர்ந்தே
உன் இதயத்தின் உள்ளாய்...

●

(1999)

## இளமையின்
## உயிருக்காய் உயிருட்ட...

என் அன்பே
கூப்பீடு தொலைவில் தான்
நீயிருக்கின்றாய்...

வான மயிலையோ
அன்றில்
வண்ண மானையோ
உனக்காய்த் தூது விடுவேன்...

உறை நடுங்கும்
வெண்பனி குளிரில்
உனக்காய்த் தூது விட
சீதளச் சீமைக் காற்றையா
தூது விடுவேன்?...

என் அன்பே!
பனியின் முகடுகளில்
உன் பாதங்கள் பட்ட

அவடுகளில் முத்தமிட்டே
நான் முழுப் பைத்தியக்காரன்
ஆகின்றேனோ?..

எனக்காய் – என்னவளே
என் இளமையின்
உயிருக்காய் உயிரூட்ட
உன்னுடன் என்னையாய்
உயரூட்ட
யாரைத் தூது விடுவேன்?...

ஆயினும் நீ
கூட்பீடு தொலைவில் தானா
என்னவளே!...

●
(1999)

# புதுமையாய் புலரட்டும் தமிழ் புது வருடமே

நித்தம் கழியும் நிலை நாழிகைகளும்
எச்சம் மிஞ்சும் எம் தலைமுறை வாழ்விலும்
கொட்டம் புரியும் கொடூர கடூரர்களும் — இனி
மிச்சம் அவர்தமையே இலாமலாக்குவோம்

சொந்தம் எனவே துயருறும் தாயகந்தன்னில்
ஆதரவினை அன்பின் உறவினால் தொடுப்போம் — கொடும்
பந்தம் பலவாய் பைத்தியங் கொண்டோர்
குதறும் நம் வாழ்விலிருந்து குமுறியெழுவோம்

புத்தம் புதிதாய் புலரும் தொண்ணூற்றொன்பதே
புதுமை பலவும் படைத்தே மிளிரவாய்
சுத்தம் எங்கள் சுதந்திர பூமிதனிலே
கருமை நீக்கியே செஞ்சூரியச் சுடராவாய்

இன்பம் பொழிந்திடும் தேன் மழையாய்
துயருறும் வாழ்வைத் துடைத்தெறிந்திடுவாய்
துன்பம் நீங்கிடும் சுதந்திர சுவாசக் காற்றாய்
புலரும் தொண்ணூற்றொன்பதே புதுமையாயிடுவாய்


கடினம் மிகுந்த தரணி வாழ்வினிலே
நிதமாய் எமை வாட்டும் தீயவரை ஒழித்திடுவாய்
படிமங் கொண்டே பாட்டாளிகளை உயர்த்தியே
பதமாய் நம் வாழ்வுக்கும் பகுத்தறிவினை ஊட்டிடுவாய்

புதுமை பொங்கும் தொண்ணூற்றொன்பதினிலே
மலரட்டும் நம் புதிய தமிழ் வாழ்வுமே
பொதுமை எங்குமாய் பொதித்திடுவாய்
மலரட்டும் இனிய தமிழ் புது வருடமே...

•
(1999)







## இது வரையில் நான்......

- அணையாத அறிவாலயம்
- விடியலின் கானம்
- இன்னமும் இருட்டினில்
- உறக்கந்தேடும் உலகிற்காய்
- உனக்குள்ளேயே உள்ளிருப்பு
- இழப்புக்களையும் இழப்போம்
- கல்லறைக்குள் கதிரவன்
- வெண்பனிச் சுவடுகள்
- காற்றோடு பேசுதல்
- அக்னிப் பிரவேசம்
- கல்லறை மேலான காற்று
- மரணம் வாழ்வின் முடிவல்ல
- அம்மம்மா நினைவலைகள்